பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 21 திங்கட்கிழமை 03.02.2025 | அதிர்வு 186

## மோ.சைக்கிள் ஓட்டப் பந்தயம் தெஹிவளையில் 10 பேர் கைது

மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 10 இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்தனர். 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில்

# பிள்ளையானுக்கு எதிராக சாட்சி சொல்ல அஸாத் மௌலானா நாடு திரும்புவாராம்!



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து "சனல் 4" அலைவரிசைக்கு தகவல்களை வழங்கி அதிர்ச்சியை ஏற்படுத்திய அஸாத் மௌலானா என்றழைக்கப்படும் மொஹமட் மஹிலார் மொஹமட் ஹன்ஸீர் மேலும் தகவல்களை வழங்க தயாராகவுள்ளார் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அஸாத் மௌலானா நாடு திரும்புவது தொடர்பில் உறுதியான தீர்மானம் எதனையும் இதுவரை எடுக்கவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். 04▶



# உள்ளூராட்சித் தேர்தல்களில் ஜனாதிபதி பிரசாரம் செய்யார்

### பதவியின் கண்ணியத்தைப் பேண அவர் முடிவாம்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டங்களில் பங்குப் பற்றாமலிருக்க ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தீர்மானித்திருக்கின்றார் என செய்தி ஏஜென்ஸிகள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி என்ற பொதுவான பதவியில் இருந்துக் கொண்டு தேர்தல் பிரசார மேடையேறுவது பொறுத்தமற்றது என்பதை ஜனாதிபதி ஆளும் தரப்பின் உறுப்பினர்களிடம் குறிப்பிட்டுள்ளார். 04▶

# சிறிலங்காவின் சுதந்திர தினமான நாளை தமிழ் மக்கள் கரிநாளாகவே அனுஷ்டிப்பர்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

சிறிலங்காவின் சுதந்திர நாளை கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர் நம் மக்கள். அதன் அடிப்படையில் தமிழர் தாயக நிலப்பரப்பில் நாளை கரி நாள் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் 04▶

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் எம்.பி. பதவியை வறிதாக்க கோரி மனு



பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவற்றதாக்கி உத்தரவிடுமாறுக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை இலங்கை பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுக பெரேரா தாக்கல் செய்துள்ளார்.

அமைச்சர் ஆனந்த விஜேபால, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இதில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதியால் பிரதிவாதியான ஆனந்த விஜேபால பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார் என மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியான சண்டே டைம்ஸ் பத்திரிகையில், ஆனந்த விஜேபால ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியாக நியமிக்கப்பட்டார் எனச் செய்தி வெளியிடப்பட்டதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தாம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கை விடுத்தார் எனவும், அமைச்சர் ஆனந்த விஜேபால ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியாக நியமிக்கப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொண்டார் எனவும் மனுதாரர் கூறியுள்ளார்.

அரசமைப்பின் 91 ஆவது பிரிவில் பொது சேவையில் ஈடுபடும் ஒருவர் நாடாளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிக்க தகுதியற்றவர் என குறிப்பிடப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.


ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி பதவி என்பது ஓர் அரச பதவி என்றும், அதன்படி, அமைச்சர் ஆனந்த விஜேபால அத்தகைய பதவியை வகிக்கும் அதேவேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவர் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பிரகாரம், அரசமைப்பின் படி அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் பதவி வகிக்க தகுதியற்றவர் என்று தீர்ப்பளித்து, அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவற்றதாக்கி உத்தரவிடுமாறு மனுதாரர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

மேலும், இந்த மனு விசாரிக்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும் வரை ஆனந்த விஜேபால நாடாளுமன்ற உறுப்பினராக அமரவும், நாடாளுமன்றத்தில் வாக்களிக்கவும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் ஆனந்த விஜேபால பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகச் செயல்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

# கென் பாலேந்திரா, ஹரி ஜயவர்தன
# இரு வர்த்தகப் பிரமுகர்கள் மறைவு





இலங்கையின் இரண்டு தொழில் முயற்சியாளர்களான தேசமான்ய கந்தையா கென் பாலேந்திரா மற்றும் ஹரி ஜயவர்தன ஆகிய இருவரும் காலமானார்கள்.

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் முதலாவது இலங்கைத் தலைவரான தேசமான்ய கந்தையா கென் பாலேந்திரா தமது 84ஆவது வயதில் அவர் காலமானார்.

கென் பாலேந்திரா இந்த நாட்டின் வணிக உலகில் ஒரு மைல்கல் என்று விவரிக்கக்கூடிய ஒரு வணிகத் தலைவர் ஆவார்.

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவராக இருந்த காலத்தில், கென் பாலேந்திரா அதன் அனைத்து கட்டுப்பாட்டு நிறுவனங்களின் தலைவராகவும் பணியாற்றினார்.

அத்துடன் பாலேந்திரா சிலோன் டொபாகோ கம்பெனி, பிரெண்டிக்ஸ், யூனியன் அஷ்யூரன்ஸ் உள்ளிட்ட பல நிறுவனங்களில் தலைவர் மற்றும் இயக்குநர் பதவிகளை வகித்துள்ளதுடன், இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவராகவும் (1998 – 2000) கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் – இணுவிலில் பிறந்த கென் பாலேந்திரா, கொள்ளுப்பிட்டி பகுதியில் வசித்து வந்தார். அவர் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவராவார்.

கென் பாலேந்திரா தனது பாடசாலை நாட்களில் ரக்பி வீரராகவும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பிரபல தொழிலதிபர் ஹெர ஜயவர்தன தனது 82ஆவது வயதில் காலமானார்.

ஹரி ஜயவர்தன என்று பிரபலமாக அறியப்படும் டொன் ஹரோல்ட் ஸ்டாசன் ஜயவர்தன, Melstacorp PLCயின் தலைவராகவும், டென்மார்க்கிற்கான இலங்கை தூதுவராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கையின் பணக்காரர்களில் ஒருவராக ஜயவர்தனவை Forbes பட்டியலிட்டிருந்தது.

அமெரிக்காவிற்கு வெளியே சிறப்பாக நிர்வகிக்கப்படும் நிறுவனங்களின் குழசழுநள பட்டியலில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை நிறுவனங்களான Distilleries Company of Sri Lanka மற்றும் Aitken Spence ஆகிய இரண்டின் தலைவராகவும் ஜயவர்தன பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக போதைப்பொருள் பாவனையால் உயிரிழப்பு

அதிக போதைப்பொருள் பாவனை காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனையில் அதீதபோதை பாவனை காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, இளைஞன் சிறு குற்ற செயல்களில் ஈடுபட்ட நிலையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்ததையடுத்து ஓரிரு நாள்களுக்கு முன்னரே விடுவிக்கப்பட்டவர் என்றும், சிறையில் இருந்து வெளியே வந்த பின்னர் நண்பர்களுடன் இணைந்து போதையை நுகர்ந்த நிலையிலையே, அதீத போதை காரணமாக சுகவீன மேற்பட்டது என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். உயிரிழந்த இளைஞனுடன் சம்பவ தினத்தன்று போதையை நுகர்ந்த ஏனையவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.



# இலங்கைக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களுக்கும் 17 வரையில் விளக்கமறியல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.



இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மன்னாருக்கு தெற்கு கடற்பரப்பில் இழுவைப் படகு ஒன்றில் மீன் பிடித்துக்கொண்டிந்த 10 இந்திய மீனவர்களை இன்று திங்கட்கிழமை அதிகாலை இலங்கைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தாழ்வுபாடு கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் இன்று திங்கட்கிழமை மதியம் மன்னார் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதிவான் மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.





# மன்னார் நீதிமன்று முன்றிலில் துப்பாக்கிச்சூடு

# மற்றொரு சந்தேகநபர் நேற்று யாழில் கைது!

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இந்த சந்தேக நபர் யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருந்தது.

இந்நிலையில் விசாரணைகளுக்காக சென்ற சந்தேக நபர்கள் மூவர் உள்ளடங்கலாக நான்கு நபர்கள் மீது நீதிமன்றத்திற்கு முன் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத்துடன் தொடர்புடைய மூவர் உள்ளடங்கலாக பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விசேட அதிரடிப்படை மற்றும் யாழ்ப்பாண பொலிஸார் புலனாய்வு பிரிவினரால் குறித்த சந்தேக நபரை நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னாருக்கு அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மோ.சைக்கிள்...

தெஹிவளையிலிருந்து வெள்ளவத்தை நோக்கி மரைன் டிரைவால் நேற்றைய தினம் அதிகாலை அதிக இரைச்சலுடன் மோட்டார் சைக்கிள்கள் பயணிக்கின்றன எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் 10 மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மொரட்டுவை, இரத்மலானை, தெஹிவளை, கல்கிஸ்ஸை மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 18 முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

பொலிஸாரின் விசாரணையில், சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

### சிறிலங்காவின்...

நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று மாலை தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தெடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறிலங்காவின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேச மக்கள் சுதந்திர தினமாக கருதுவது கிடையாது.

சிறிலங்காவிற்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் கொண்டு வரப்பட்ட புதிய அரசமைப்புகளைத் தமிழ் மக்கள் நிராகரித்தே வந்திருக்கின்றனர்.

அந்த அரசமைப்புக்கள் மூன்றும் ஒற்றையாட்சி அரசமைப்பின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டமையால் தமிழ் மக்கள் அவற்றௌ நிராகரித்திருந்தனர்.

அதேபோன்று இப்போதும் புதிய அரசமைப்பு கொண்டு வரும் நடவடிக்கைகள் தான் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான ஒற்றையாட்சி அரசமைப்பை தமிழ் மக்கள் எப்போதும் நிராகரிப்பார்கள்.

அடிமைசாசனத்தின் அடையாளமாக இருக்கின்ற ஒற்றையாட்சி அடையாளங்களை நிராகரிக்கிற அதேவேளையில் தமிழில் தேசிய கீதம் பாடுவதால் எந்த வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

இவ்வாறான நிலைமையில் சிறிலங்காவின் சுதந்திர தினத்தை கரி நாளாகத் தான் பார்ப்பது எம்முடைய மரபாக இருக்கிறது.

அந்த வகையில் சிறிலங்காவின் சுதந்திர நாளை கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர் நம் மக்கள். அதன் அடிப்படையில் தமிழர் தாயக நிலப்பரப்பில் நாளை கரிநாள் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

அவ்வாறு வடக்கு மற்றும் கிழக்கில் நடக்கவுள்ள இந்த கரிநாள் போராட்டத்தில் நாங்களும் கலந்து கொள்ள உள்ளோம்.

இதேவேளை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் நாளையதின் கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன எனவும் கட்சி பேதங்களுக்கப்பால் அனைவரையும் அவற்றில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### உள்ளூராட்சி...

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னர் அனைத்து மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் பொது மக்கள் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துக் கொள்ளவுள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் நடத்தப்படும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நடைபெறும் தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்துக் கொள்ளாமலிருக்க ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தீர்மானித்துள்ளாரென அறிய முடிகிறது.

ஜனாதிபதி என்ற பொதுவான பதவியை வகித்துக் கொண்டு ஒரு கட்சியின் தேர்தல் பிரசார மேடையேறுவது சிறந்ததாக அமையாது என ஜனாதிபதி ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

### பிள்ளையானுக்கு...

இந்நிலையில் அஸாத் மௌலானா அரசியல் தஞ்சம் கோரி வெளிநாட்டில் தங்கியுள்ளார். அஸாத் மௌலானா, சுயவிருப்பின் பேரில் நாடு

திரும்பி தாமாக முன்வந்து உயிர்த்த ஞாயிறு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருக்கின்றார் என சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதி அமைச்சரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தனின் (பிள்ளையானின்) உதவியாளராக முன்னர் செயற்பட்ட அஸாத் மௌலானா, பின்னர் வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்று அங்கிருந்தபடி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து 'சனல் 4' அலைவரிசைக்கு அதிர்ச்சித் தகவல்களை வழங்கினார். அந்தத் தாக்குதலுக்கு பிள்ளயானும் சூத்திரதாரி என்ற சாரப்பட அவரது அந்த சாட்சியங்கள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




### ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஊடக அறிக்கை:

# ஸ்ரீலங்காவின் சுதந்திர தினம்: தமிழர்களுக்குக் கறுப்பு நாள் !

பெப்ரவரி 04. 2025 ஸ்ரீலங்காவின் 77 ஆவது சுதந்திர தினம், தமிழர் தாயகத்தில் கறுப்பு நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காவின் 77 ஆவது சுதந்திர தினத்தை கருப்பு நாளாக அனுஷ்டிப்பதில் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் தாயகத்திலும், உலகளாவிய புலம்பெயர்ந்தோரிலும் உள்ள தமிழர்களுடன் ஒற்றுமையுடன் நிற்கிறது.

தமிழர்களுக்கு, பெப்ரவரி 04 என்பது கொண்டாட்ட நாளல்ல. மாறாக பல தசாப்தங்களாக ஒடுக்குமுறை, அரசால் ஆதரிக்கப்படும் வன்முறை மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான ஸ்ரீலங்காவின் இனப்படுகொலைப் போரிலிருந்து உருவான தீர்க்கப்படாத அநீதிகளின் வேதனையான நினைவூட்டலாகும்.

மே 2009 இல் நடந்த இந்தப் போரின் உச்சக்கட்டமாக மிகப் பெரிய போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களைத் தமிழர் தாயகம் கண்டது. ஆனால் இன்றுவரை, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நம்பகமான பொறுப்புக்கூறல் எதுவும் வழங்கப்படவில்லை.

சுதந்திரம் அடைந்து 77 ஆண்டுகள் ஆன பிறகும், போர் முடிந்து 15 ஆண்டுகள் ஆன பிறகும், ஸ்ரீலங்கா ஒரு தோல்வியடைந்த நாடாகவே உள்ளது. பொருளாதார வீழ்ச்சி நிலை, அதிக இராணுவச் செலவு, அரசியல் முன்னேற்றம் அற்று, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு நிலைமை போன்றவற்றால் போராடி வருகிறது.

தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் அதிக அளவில் இராணுவம் இருந்த போதிலும், போதைப் பொருள் மற்றும் ஆயுதம் ஏந்திய குண்டர்கள் பரவலாக கிடைப்பது போன்ற சமூகப் பிரச்சினைகள் தொடர்ந்து நீடிக்கப்படுகின்றன.

இது ஆளும் அரசின் அலட்சியத்தை சுட்டிக்காட்டுகிறது. மாற்றத்திதுக்கான வாக்குறுதியின் பேரில் பிரச்சாரம் செய்த புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், எந்த அர்த்தமுள்ள சீர்திருத்தங்களையும் வழங்கத் தவறிவிட்டது. தமிழ் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களை தன்னிச்சையாக தடுத்து வைக்க வரலாற்று ரீதியாகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியான கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வாக்குறுதியளிக்கப்பட்டபடி இன்னமும் ஒழிக்கப்படவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக சிறையில் உள்ளனர். நியாயமான விசாரணைகள் இல்லாமல், ஒடுக்குமுறை ஆட்சியைத் தொடர்கின்றனர்.

மேலதிகமாக வடகிழக்கு தமிழர் தாயகத்தில் கட்டாயப்படுத்தப்பட்ட, அரசால் தொடரப்படும் சிங்களக் குடியேற்றங்கள் - புத்தமயமாக்கல் தொடர்கின்றன. இது தமிழர் பிராந்தியத்தின் மக்கள் தொகை சமநிலையை மாற்றவும், தமிழர்களை மேலும் ஓரங்கட்டவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த திட்டமிடப்பட்ட காலனித்துவக் கொள்கைகள் தமிழ் அடையாளத்தையும் பாரம்பரியத்தையும் அழிக்கவும், தமிழ் மக்களை அவர்களின் சொந்த தாயகத்தில் சிறுபான்மையினராக மாற்றவும் முயல்கின்றன. ஸ்ரீலங்காவில் தமிழர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளை நிலைநிறுத்தும் நீதி மற்றும் நீடித்த அரசியல் தீர்வுகளை அடைய சர்வதேச தலையீட்டுக்கு உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகம் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறது.

ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்கவும், அரசியல் தீர்வு, உண்மையான நீதியை நோக்கிய அர்த்தமுள்ள நடவடிக்கைகளை ஆதரிக்கவும் ஆஸ்திரேலிய அரசையும் சர்வதேச சமூகத்தையும் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

நாளை பெப்ரவரி 4, 2025, ஆஸ்திரேலியாவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் எதிர்ப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றுகூடி, நீதி, கண்ணியம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான தங்கள் கோரிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துவார்கள்.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஆஸ்திரேலிய அரசையும் சர்வதேச சமூகத்தையும் ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்களின் சுதந்திரம் மற்றும் நீதியுடன் கூடிய அமைதிக்கான தேடலில் துணை நிற்குமாறு கேட்டுக்கொள்கிறது.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் அனைத்து தமிழர்களுக்கும் ஒருங்கிணைந்த குரலாகும்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் பதில் என்ன?

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக முக்கிய ஆபத்து எச்சரிக்கை ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளியிட்டிருக்கின்றார். அது தொடர்பில் அரசாங்கம் தனது பதிலை மக்களுக்கு வழங்க வேண்டும்.

இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போல உலகின் பல நாடுகளுக்குள் அவ்வப்போது பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சமயங்களில் எல்லாம் அவை அந்த நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்கு இலங்கையைப் போலவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைத்தான் நாடி இருக்கின்றன.

இலங்கை உட்பட அத்தகைய நாடுகளை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணை எடுப்பதற்கு முன் வருகின்ற சர்வதேச நாணய நிதியம், அந்த நாடுகள் அந்தச் சமயங்களில் வெளிநாடுகளுக்கு அல்லது வெளித்தரப்புகளுக்கு வழங்க வேண்டியிருக்கும் கடன் நிலுவைகளை ஒழுங்குபடுத்துவதற்காகக் கடன் மறு சீரமைப்பு திட்டங்களை முன்வைக்கும். இலங்கை விடயத்திலும் அது நடைபெற்றது.

2022 ஆரம்பத்தில் வெளிநாடுகளுக்குதான் வழங்க வேண்டிய கடன் தவணைக் கொடுப்பனவுகளை செலுத்த முடியாது கைவிரித்த இலங்கை, அதனால் கடனிறுக்க வழியற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

எனினும் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டில் அந்தக் கடன்களை மீளளிப்பதற்கான மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு இணக்கம் காணப்பட்டது.

அதன்படி 2028 ஆம் ஆண்டு வரை கடன் மீள் செலுத்துகையிலிருந்து இலங்கைக்கு விலக்களிக்கப்பட்டது. 2028 இலிருந்து தனது பழைய கடன் நிலுவைகளை இலங்கை மீளச் செலுத்தத் தொடங்க வேண்டும்.

ஆனால் சர்வதேச ரீதியில் இப்படி சர்வதேச நாணய நிதியம் தலையிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட பல்வேறு நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு திட்டங்களில் சுமார் 60 வீதம் மீண்டும் - திரும்பவும் - கடன் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட்டன என்பதை சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டுகின்றார்.

அதே நிலைமை இலங்கைக்கு வரக் கூடிய ஆபத்து இருப்பதாக அவர் இப்போது எச்சரிக்கின்றார். 2028 இல் பழைய கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் இலங்கை மீண்டும் ஒரு மறுசீரமைப்புக்கு கடன் கொடுத்த நாடுகளோடு அல்லது தரப்புகளோடு இணங்கிப் போக வேண்டிய கட்டாயம் ஏற்படும் சூழல் தெரிவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த உண்மைகள் மக்களிடமிருந்து மறைக்கின்றனர். இவற்றை யாரும் மக்களுக்குச் சொல்வதில்லை. மற்றொரு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு செல்வது என்பது மக்களை மேலும் சிக்கலில் தள்ளும் விடயமாகும் என்கின்றார் சஜித் பிரேமதாஸ.

"தற்போதைய அரசாங்கத் தரப்பினர் எதிர்க்கட்சியில் இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்தோடு புதி யதொரு இணக் கப்பாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது கூறினர். இப்போது முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட அதே ஒப்பந்தத்தை அதே வழியில் இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது. இவற்றுக்கு மத்தியில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான பின்னணி உருவாக்கப் பட்டுள்ளதா என அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறேன். மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்'' - என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசு தனது பதிலை மக்களுக்குத் தெளிவாக அளிக்க வேண்டும். 2028 இலும் இதே அரசு பதவியில் இருப்பதற்கான சட்ட உரித்து - அதிகாரம் - உள்ளது என்ற வகையில் தனது திட்டத்தை - இலக்கை - இயலுமையை - அரசு வெளிப்படுத்துவது அதன். பொறுப்பும் கடப்பாடுமாகும்.





# சிறார்களிடம்நல்ல மனப்பாங்கை பெற்றோர்கள் உருவாக்க வேண்டும்

## வைத்திய அத்தியட்சகர் ரஹ்மான்

**(பாறுக் ஷிஹான்)**

தரம் 01 மாணவர்களுக்கான மகழ்ச்சிகரமான வித்தியாரம்ப விழா கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலயத்தில் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல்.எப். றஹ்மானும் , கௌரவ அதிதியாக கல்முனை கல்வி வலயத்தில் முன்பள்ளி பாடசாலை ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.அப்துல் றஹ்மானும், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

இதன் போது கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை அத்தியட்சகர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளை எவ்வாறு ஒழுக்க விழுமியம் நிறைந்த நாட்டின் அபிவிருத்திக்குப் பொருத்தமான ஆரோக்கியமுள்ள சுகதேகிகளாகவும் நேர்மனப்பாங்கு சிந்தனையுள்ள நற்பிரஜைகளாகவும் உருவாக்க வேண்டும்.

நல்ல மனப்பாங்கு விருத்தியை பெற்றோர்கள் உருவாக்க வேண்டும். புன்னகைக்கும் முகங்களுடன் எங்கள் குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள்.

இந்த நிலையில் ஒழுக்க விழுமியங்களை கட்டி எழுப்பவும் சமநிலை ஆளுமையை வழங்கவும் வழிகாட்ட வேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.

பாடசாலையின் அதிபர் அத்தியாவசியக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்தார்.





# சேவைநலன் பாராட்டும் மதிப்பளிப்பும்!

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற கிராம அலுவலர் சுப்பிரமணியம் கரிகாலன், அபிவிருத்தி உத்தியோகத்தர் நடன லிங்கம் சுஜீவன் ஆகியோருக்கான சேவைநலன் பாராட்டும் மதிப்பளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

லண்டனில் புலம்பெயர்ந்துள்ள கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த உறவுகளின் அமைப்பான உதவும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இடம்மாற்றம் பெற்றுச் சென்ற கிராம அலுவர் சுப்பிரமணியம் கரிகாலன் மற்றும், இடம்மாற்றம் பெற்றுச் சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தரின் சார்பாக நிகழ்வில் கலந்து கொண்ட அவரின் தந்தையார் அன்னலிங்கம் நடனலிங்கம் ஆகியோர் இதன் போது மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. அதனையடுத்து இடம் மாற்றம் பெற்றுச் சென்ற கிராம உத்தியோகத்தர் மற்றும், அபிவிருத்தி யோகத்தர் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற கிராம உத்தியோகத்தர் மற்றும், இடமாற்றம் பெற்றுச்சென்ற அபிவிருத்தி உத்தியோகத்தரின் சார்பாக நிகழ்வில் கலந்துகொண்ட அவரின் தந்தையார் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு கிராம மட்ட அமைப்புக்களால்மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் திருமதி இராஜயோகினி ஜெயக்குமார், கள்ளப்பாடுதெற்கு கிராம அலுவலர் யோகராசா கஜேந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# பஸ் தரிப்பிடத்தில் பெண்ணை மோதிய சாரதி கைதானார்!

(மஸ்கெலியா )

ஹட்டன் அரச பஸ் தரிப்பிடத்தில் பெண் ஒருவரை பஸ் மோதியதில் அந்தப் பெண் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று (02) ஹட்டன் அரச பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் நோர்வூட் பிரதேசத்தில் உள்ள 69 வயதுடைய பெண் ரீட்டா மேரி தியசிரி கிராமத்தை சேர்ந்தவர். அவிசாவளை பஸ்ஸில' மோதி படுகாயம் அடைந்த நிலையில் கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்று ஹட்டன் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.



# புலோலி மத்தி தொப்பளாவத்தை வைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

வடமராட்சி புலோலி மத்தி தொப்பளாவத்தை அருள்மிகு நரசிங்க வைரவர் ஆலய ஏககுண்டபட்ஷ மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.18 மணிமுதல் 10.11 மணி வரையிலான சுபவேளையில் நடைபெற வுள்ளது.

இதற்கான கர்மாரம்பம் 8 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 4.15 மணி முதல் ஆரம்பமாகும். 9 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணி முதல் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

அச்சுவேலி கதிரிப்பாய் அம்மன் ஆலய பிரதமகுரு சக்தி உபாசகர் சிவஸ்ரீ. ந.சுவர்ணதேவக்குருக்கள் பிரதம குருவாக இருந்து வாணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மண்டலேஸ்வரக் குருக்களின் உதவியுடன் இந்தக் கும்பாபிசேகத்தை பிரதிஸ்டா செய்து நடத்தி வைப்பார்.

# 77ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள்; இந்தமுறை குறைந்த செலவில் ஏற்பாடுகள்!

இலங்கையின் 77ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகள், சுதந்திர சதுக்கம் மற்றும் சுதந்திர அவென்யூ பகுதியை மையமாகக் கொண்டு நாளை (04) காலை நடைபெறவுள்ளன.

கொழும்பில் இன்று (03) காலை நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க இதனை தெரிவித்தார்.

நாளை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

அதன்படி, சுதந்திர நிகழ்வுகளுக்கு வருபவர்கள் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் சுதந்திர தின நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்பார்கள் என்றும் கூறினார்.

நாளை விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சகல அழைப்பாளர்களும் காலை 7 மணிக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட இடத்துக்கு வந்து தங்கள் இருக்கைகளில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று வீதி போக்குவரத்து பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்தார்.

இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களை குறைந்த செலவில், அதிக பொது மக்களின் பங்கேற்புடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களுக்காக முப்படை வீரர்களின் எண்ணிக்கை 40 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் அணிவகுப்புக்கு முப்படை கவச வாகனங்கள் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐவனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலிக் கூட்டம்



சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் விக்டர் ஐவனுக்கான அஞ்சலிக் கூட்டம் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் இது நடைபெற்றது.

அஞ்சலி உரைகளை வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரன் மற்றும் காந்தீயம் பத்திரிகை ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் ஆற்றினர்.

ஐவனின் உருவப்படத்துக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. காந்தீயம் சிறப்பிதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



# பழுதடைந்த திராட்சை, தோடைகள் அம்பாறையில் மீட்கப்பட்டு அழிப்பு!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பழுதடைந்த திராட்சை, தோடம் பழங்கள் உள்ளிட்ட பழவகைகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் குறித்த பங்கசு படர்ந்த திராட்சை பழங்கள் அழுகிய தோடம் பழங்கள் உள்ளிட்ட பழவகைகள் யாவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பழுதடைந்த பழங்கள் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படுகின்றன என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய செயற்பட்ட பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸகீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சென்ற பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் பெருந்தொகையான பழுதடைந்த திராட்சை பழங்கள், தோடம்பழங்கள் உள்ளிட்ட பழங்களை மீட்டு அழித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையை முன்னெடுத்த சுகாதார அதிகாரிகள் குறித்த திராட்சை பழங்கள் மற்றும் ஏனைய பழங்களை வீதியோரங்களில் விற்பனை செய்த நபர்களை எச்சரிக்கை செய்து அனுபபினர்.

குறித்த பழ வகைகள் யாவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. வெளிமாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக இங்கு கொண்டுவரப்பட்டுள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.



# சீனப் பிரஜை ஒருவருக்கு உதவிய விசேட அதிரடிப்படை

(மஸ்கெலியா )

உலக முடிவு மாஎலிய பகுதியில் நடைபயணம் மேற்கொண்டபோது இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்ட சீனப் பிரஜை ஒருவருக்கு நுவரெலியா முகாமில் உள்ள விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழு உதவியது.

காயமடைந்த அந்தப் பெண்ணை கவனித்த விசேட அதிரடிப்படை அதிகாரிகள் உடனடியாக முதலுதவி அளித்தனர்.

கிடைக்கக்கூடிய உபகரணங்களைப் பயன்படுத்தி, அவர்கள் ஒரு தற்காலிக பாரம் தூக்கியை உருவாக்கிக் குறித்த பெண் மருத்துவ சிகிச்சையை பெறுவதறடகு உதவினர்.

கிட்டத்தட்ட 4 கிலோ மீட்டர் தூரம் அந்தப் பெண்ணைத் தூக்கிச் சென்று உதவியுள்ளனர்.




# பாதுகாப்பான புலம்பெயர் தொடர்பில் காரைதீவில் பிரதேச நடமாடும் சேவை

(நூருல் ஹுதா உமர்)

மனித அபிவிருத்தி தாபனம், காரைதீவு பிரதேச செயலகத்துடன் இணைந்து பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவையை நடத்தியது. இந்த நடமாடும் சேவை காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ. அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவைக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அஸிஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வீ.ரீ.ஹசினா, காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அம்பாறை மாவட்ட அலுவலக அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நடமாடும் சேவைக்கு வருகை தந்த பொது மக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கினர். முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.




# களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலருக்குப் பிரியாவிடை

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று( களுவாஞ்சிக்குடி ) பிரதேச செயலராகக் கடந்த 7 வருடங்களாக உன்னதமான பொதுச் சேவை புரிந்த பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்துக்கான பிரியாவிடை நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஒழுங்கமைப்பில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரனின் தலைமையில், பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. சேவை நலன் பாராட்டு விழா மற்றும் பிரியாவிடை நிகழ்வில் பலரும் பிரதேச செயலாளரின் அர்ப்பணிப்பான சேவைகள் பற்றி உரையாற்றினார்கள். நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா, மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுள்ளார்.








# வீரநகர் கடற்கரையில் கருங்கல் வேலி அமைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை ஏகாம்பரம் வீதியை அண்மித்த வீரநகர் கடற்கரையில் கடலரிப்பை தடுக்கும் கருங்கல் வேலி அமைப்பதற்கான நிர்மாணப் பணிகள் இன்று (3) வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக கடலரிப்பால் வீரநகர் பகுதியில் உள்ள பொது மக்களின் குடியிருப்புகள் பாரிய சேதத்துக்கு உள்ளாகி வந்த நிலையில், அந்தப் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமைய இந்தக் கல்வேலி அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் குடியிருப்புப் பகுதியை மையமாகக் கொண்டு,100 மீற்றர் நீளமும் 2 மற்றர் அகலமும் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தக் கல்வேலி 6.47 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.க.ரொஷான் பிரிய சஞ்ஞன, மாவட்ட அரச அதிபர் மற்றும் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் மாகாணப் பொறியியலார் மற்றும் அலுவலர்களும், பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.



# ஐஸ் போதைப் பொருளுடன் 37 வயதுடைய நபர் கைது!

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டக்களப்புத் தரவை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 37 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் மறைத்து வைக்கப்பட்ட 770 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரைச் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை கல்முனை பிராந்தியத்துக்கான உதவி பொலிஸ் அத்தியட்சகர் உதுமாலெவ்வை மஹ்மூத்கான் இப்னு அசாரின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் ஆலோசனைக்கமைய பொலிஸ் சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. நஸார் தலைமையிலான பொலிஸ் குழுவால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

# குடிசைகள் இடிக்கப்படாது நலத்திட்டங்கள் நிறுத்தப்படாது



## ஆம் ஆத்மிக்கு பிரதமர் பதிலடி

டில்லியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இங்குள்ள குடிசை பகுதிகள் இடிக்கப்படாது எனவும் எந்த நலத்திட்ட உதவிகளும் நிறுத்தப்படாது என்றும் பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார்.

டில்லியில் உள்ள குடிசைப்பகுதிகளை பா.ஜ.க. குறிவைத்துள்ளது, அக்கட்சி ஆட்சிக்கு வந்தால் குடிசைகள் அழிக்கப்படும், நலத்திட்ட உதவிகள் நிறுத்தப்படும் என்ற ஆம் ஆத்மி கட்சியின் குற்றச்சாட்டுக்கு பிரதமர் இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.

டில்லியின் ஆர்.கே.புரத்தில் நடந்த பிரச்சார பேரணி பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி,

“ பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தேசியத் தலைநகரில் உள்ள குடிசை வாசிகளுக்கு 5ரூபாவுக்கு சத்தான உணவு வழங்கப்படும் என்று உறுதியளிக்கிறேன். அதேபோல் ஆட்டோ ஓட்டுநர்கள், தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைக்கப்படும் அவர்களுக்கு 10 லட்சம் ரூபாவுக்கு காப்பீடு திட்டம் வழங்கப்படும். அவர்களுடைய குழந்தைகளின் பள்ளி கல்வி கட்டணத்துக்கும் பா.ஜ.க. அரசு உதவிகள் செய்திடும்.

நான் உங்களுக்கு இன்னுமொரு உத்தரவாதமும் தருகிறேன். அந்த பேரழிவுக்காரர்கள் கூறுவதுபோல, பா.ஜ.க. ஆட்சியில் டில்லியில் உள்ள எந்த ஒரு குடிசையும் இடிக்கப்படாது. டில்லி மக்களுக்கான எந்த ஒரு நலத்திட்ட உதவிகளும் நிறுத்தப்படாது.

பூர்வாஞ்சல் மக்கள்தான் என்னை நாடாளுமன்ற உறுப்பினராக்கி, பிரதமாராக்கினார்கள். பூர்வாஞ்சல் மக்கள் டில்லியில் பணி புரிகிறார்கள். டில்லியின் வளர்ச்சிக்கு பங்களிக்கிறார்கள். ஆனால் கொரோனா வந்த போது, இந்த ஆம் ஆத்மி கட்சியினர் தவறான தகவல்களைப் பரப்பி, அச்சுறுத்தி டில்லியை விட்டே வெளியேற்றினார்கள்.

பிஹாருக்கான பட்ஜெட் அறிவிப்புகளை பார்த்த பின்பு இந்த ஆம் ஆத்மி தலைவர்கள் கவலையில் உள்ளனர். அவர்கள் எதிர்மறை அரசியல் செய்யட்டும். பா.ஜ.க. தொடர்ந்து பூர்வாஞ்சல் மக்களுக்கு உதவும்.” - என்றார்.

# பொலிஸ் நிலையம் மீது பெற்றோல் குண்டு வீச்சு

தமிழகத்தின், ராணிப்பேட்டையில் உள்ள சிப்காட் பொலிஸ் நிலையத்தின் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இரு மர்ம நபர்கள் இவ்வாறு பொலிஸ் நிலையத்தின் மீது பெற்றோல் குண்டுகளை வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது குறித்த தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.







### அண்ணா நினைவுநாள்:

# முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தி.மு.கவினர் அமைதிப் பேரணி

மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணாவின் 56 ஆவது நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை ஒட்டி தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கட்சியின் பொதுச் செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும், மலர்களைத் தூவியும் மரியாதை செலுத்தினர்.

முன்னதாக வாலாஜா சாலையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை அருகில் இருந்து புறப்பட்டு, அண்ணா நினைவிடம் வரை நடைபெற்ற அமைதிப் பேரணியில் முதல்வர் ஸ்டாலின், தி.மு.க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம், ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு , மெய்யநாதன் கயல்விழி செல்வராஜ் , மதிவேந்தன். மற்றும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டப்பேரவை உறுப்பினர்கள், சென்னை மேயர், துணை மேயர் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அவர்கள் அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். மெரினாவில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்திலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.




# 60 ஆண்டுகளின் பின் பாரிய வெள்ளத்தை எதிர்நோக்கியுள்ளது அவுஸ்திரேலியா!

அவுஸ்திரேலியாவில் வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு குயின்ஸ்லாந்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாகப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் வடக்கு குயின்ஸ்லாந்தின் சில பகுதிகளில் 700 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை தொடரும் என அந்த நாட்டு வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

60 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வாறானதொரு அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




# அமெரிக்காவின் நடவடிக்கை சர்வதேச வர்த்தக விதியை மீறுகிறது

## சீனா கடும் கண்டனம்




அமெரிக்காவின் நடவடிக்கை சர்வதேச வர்த்தக விதிகளை மீறுவதாக உள்ளது என சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்பு நடவடிக்கைக்கு சீனா கடும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுக்குள் வரும் சட்ட விரோத குடியேற்றம் மற்றும் போதைப் பொருள்களின் பெரும் அச்சுறுத்தல்களைத் தடுக்கும் விதமாக கனடா மற்றும் மெக்சிகோ நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருளகளுக்கு 25 சதவீதம் வரியும், சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருளகளுக்கு 10 சதவீதம் வரியும் விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

நெருக்கடிகள் தணியும் வரை இந்த வரி விதிப்புகள் தொடரும் என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்புக்குப் பதிலடியாக கனடாவும் 25 சதவிகித வரியை அமெரிக்கப் பொருள்களுக்கு விதித்துள்ளது.

அதேபோல மெக்சிகோவும் பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளது.

இந்த நிலையில், சீனா இவ்விவகாரம் குறித்து தனது கருத்தைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்பு சர்வதேச வர்த்தக விதிகளை மீறுவதாக உள்ளது எனவும் அமெரிக்காவின் இந்த செயல் இரண்டு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என்றும் சீனா குறிப்பிட்டுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 03/02/2025

## கனடாவில் அதிக அளவில் களவாடப்படும் அலைபேசிகள்

கனடாவில் அதிக எண்ணிக் கையிலான அலைபேசிகள் களவாடப்படுகின்றன அல்லது காணாமல் போகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் ரொறன் 03



# அமெரிக்காவுக்கு பதிலடி கொடுப்பதை தவிர வேறு வழியில்லை: கனடா பிரதமர் ட்ரூடோ

**அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை எனவும் கனடாவின் நடவடிக்கையால் அமெரிக்கர்களும் பாதிக்கப்படுவார்கள் என்றும் கனடா பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**கனடாவில் இருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருள்களுக்கும் 25 சத வீதம் வரி விதிக்கும் உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கையெழுத்திட்ட சில மணிநேரங்களுக்கு பின்பு ட்ரூடோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**ஒட்டோவாவில் செய்தியாளர்களிடம் பேசிய கனடா பிரதமர் ட்ரூடோ இரு அண்டை நாடுகளின் முந்தைய வரலாற்றை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். ட்ரூடோ மேலும் கூறுகையில்,**

“நார்மண்டி கடற்கரை முதல் கொரிய தீபகற்பத்தின் மலைகள் வரை ஃப்ளாண்டர்ஸ் நிலப்பரப்பு முதல் காந்தஹார் தெருக்கள் வரை உங்களின் இருண்ட காலங்களில் உங்களுடன் நாங்களும் இணைந்து போராடி இறந்துள்ளோம்.

ஆம், கடந்த காலங்களில் நமக்குள் வேறுபாடுகள் இருந்தன. ஆனால் அவற்றைக் கடந்து செல்வதற்கான வழிகளை நாம் கண்டறிந்துள்ளோம். நான் முன்பே கூறியது போல, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவுக்கு பொற்காலத்தை கொண்டு வர விரும்பினால், அதற்கு சிறந்த வழி கனடாவுடன் கூட்டு சேர்வதே தவிர எங்களைத் தண்டிப்பது இல்லை.

நாங்கள் எதனையும் அதிகரிக்க விரும்பவில்லை. ஆனால் கனடாவுக்காக, கனடா மக்களுக்காக, கன்னடியர்களின் வேலைவாய்ப்புகளுக்காக நாங்கள் போராடுவோம்.

கனடாவுக்கு எதிரான வரி விதிப்பு அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பை ஆபத்தில் ஆழ்த்தும். அமெரிக்க வாகனங்கள் உருவாக்கும் ஆலைகள் மற்றும் பிற உற்பத்தி வசதிகளை மூடுவதற்கு வழி வகுக்கும். அவை மளிகைக் கடையில் உங்களின் உணவுப்பொருள்கள் மற்றும் 03

# கியூபெக்கில் இடம்பெற்ற விபத்துக்களில் 2 பேர் பலி

கியூபெக்கில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மாகாணத்தின் இரு வேறு இடங்களில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

விபத்து தொடர்பில் நபர் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக் நகரிற்கு அருகாமையில் அமைந்துள்ள சென் கிளிச்சே பகுதியில் ஓர் விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த வாகனத்




தில் பயணம் செய்த சாரதி தூக்கி வீசி எறியப்பட்டதில் படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சென் லோரன்ஸ் பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் கார் ஒன்றும் ட்ரக் வண்டியும் மோதிக் கொண்டன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இரண்டு விபத்துக்கள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.



# அமெரிக்க பொருள்களுக்கு 25 வீத வரி: கனடா பிரதமர் ட்ரூடோ அதிரடி அறிவிப்பு

அமெரிக்க பொருள்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் ஆண்டு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். அண்டை நாடான கனடாவை, அமெரிக்காவுடன் இணைக்க வேண்டும் என்று அவர் கூறி வருகிறார். இதற்கு கனடா அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளனர். இந்த சூழலில் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். இந்த நடைமுறை கடந்த 1 ஆம் திகதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

இதற்கு பதிலடியாக அமெரிக்க பொருள்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார். இது தொடர்பாக கனடா தலைநகர் ஒட்டாவோவில் நேற்று அவர் தெரிவிக்கையில்,

"புவியியல் காரணமாக அமெரிக்காவும் கனடாவும் அண்டை நாடுகளாக உள்ளன. கடந்த கால வரலாறால் இரு நாடுகளும் நண்பர்களாக உள்ளன. பொருளாதாரத்தின் அடிப்படையில் இரு நாடுகளும் மிக நெருங்கிய வர்த்தக பங்காளிகளாக உள்ளன. காலத்தின் கட்டளையால் இரு நாடுகளும் ஓரணியாக செயல்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் இருண்ட காலங்களில் கனடா, உற்ற நண்பனாக செயல்பட்டிருக்கிறது. ஆப்கானிஸ்தான் போர் முதல் தற்போது கலிபோர்னியாவில் ஏற்பட்டிருக்கும் காட்டுத் தீயை அணைப்பது வரை அமெரிக்காவுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறோம்.

கடந்த கால நட்புறவை புதிய ஜனாதிபதி ட்ரம்ப் முன்னெடுத்து சென்றிருக்க வேண்டும். ஆனால், அவர் கனடா பொருள்கள் மீது கூடுதல் வரியை விதித்து வர்த்தக போரை தொடங்கி உள்ளார். எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்களும் அமெரிக்க பொருள்களுக்கு 25 சதவீத வரியை விதிக்கிறோம். இது அமெரிக்காவுக்கு பல்வேறு வகைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்." என்றார்.

மெக்ஸிகோ பொருள்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 25 சதவீத வரியை விதித்து இருக்கிறார். இதுதொடர்பாக மெக்ஸிகோ ஜனாதிபதி கிளாடியா கூறும் போது,

"அமெரிக்காவுக்கு தகுந்த பதிலடி கொடுக்க நிதியமைச்சருக்கு உத்தரவிட்டு உள்ளேன். அதிக வரி விதிப்பால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இருதரப்பு ஒத்துழைப்பால் மட்டுமே அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்." என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க தொழில் துறை வட்டாரங்கள் கூறிம்போது,

"மெக்ஸிகோவில் இருந்து பழங்கள், காய்கனிகள், தானியங்கள், இறைச்சி, கார் உதிரி பாகங்கள், மதுபானங்கள் உள்ளிட்டவை அமெரிக்காவுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதிபர் ட்ரம்பின் நடவடிக்கையால் இரு நாடுகள் இடையிலான வர்த்தகம் பாதிக்கப்படும். அமெரிக்காவில் அத்தியாசிய பொருள்களின் விலை உயரக்கூடும்.

கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, இரும்பு, அலுமினியம் உள்ளிட்ட தாதுக்கள், கட்டுமான பொருள்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றின் ஏற்றுமதியை கனடா நிறுத்தக்கூடும். இதனால் அமெரிக்காவில் எரிபொருள், தாதுக்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

சீன பொருள்கள் மீது 10 சதவீத வரியைஜனாதிபதி ட்ரம்ப் விதித்துள்ளார். அந்த நாட்டில் இருந்து காலணிகள், ஜவுளி, விளையாட்டு உபகரணங்கள், பொம்மைகள் உள்ளிட்டவை அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன. இவற்றின் இறக்குமதியும் பாதிக்கப்படும்." இவ்வாறு அமெரிக்க தொழில் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோவில் அமைந்துள்ள முன்னணி அலைபேசி விற்பனை நிலையங்களில் இவ்வாறு அலைபேசிகள் களவாடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் முதல் இது வரையில் ஹால்டன் பிராந்தியத்தில் மட்டும் சுமார் 100 இற்கும் மேற்பட்ட அலைபேசிகள் களவாடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் ஹால்டன் போலீசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



காணாமல் போன அலைபேசிகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

சி சி டிவி காணொளிகள் மூலம் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றனஎனதெரிவிக்கப்படுகிறது.

அலைபேசிகள் எவ்வாறு களவாடப்படுகின்றன என்பது குறித்த காணொளிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

குழுவாக கடைகளுக்குள் பிரவேசித்து கடை விற்பனையாளர்களின் கவனத்தை திசை திருப்பி அலைபேசிகள் களவாடப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் நூதனமான முறையில் சில நொடிகளில் அலைபேசிகள் களவாடப்பட்டு சந்தேகம் இன்றி கடையை வெட்டு வெளியேறி சென்று விடுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.





# அமெரிக்காவின் தேசிய கீதத்துக்கு எதிர்ப்பை வெளியிட்ட கனடியர்கள்

அமெரிக்காவின் தேசிய கீதத்திற்கு கூக்குரல் எழுப்பி எதிர்ப்பு வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற ஐஸ் ஹொக்கி போட்டி ஒன்றின் போது இவ்வாறு அமெரிக்க தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது கனடிய ரசிகர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஒட்டாவா செனட்டர்ஸ் ஹொக்கி அணியின் ஆதர வாளர்கள் இவ்வாறு தங்கள் எதிர்ப்பினை வெளிப்படுத்தி உள்ளனர். கனடிய ஏற்றுமதி பொருள்களுக்கு அமெரிக்கா வரி விதிப்பதாக அறிவித்துள்ளது.

கனடாவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 வீத வரி அறவீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் முதல் இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் ஹாக்கி போட்டியில் அமெரிக்க தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது கனடிய அணியின் ரசிகர்கள் கூக்குரல் எழுப்பி அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க தேசிய கீதத்தை எதிர்த்து கூக்குரல் எழுப்பும் காட்சிகள் சமூக ஊடகம் வாயிலாக பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# கனடாவில் வங்கி கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய நபரை தேடும் பொலிஸ்

கனடாவில் வங்கி கொள்ளை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஸ்காப்ரோ குதியில் அமைந்துள்ள வங்கி ஒன்றில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்ச் மற்றும் வார்டன் வீதிகளுக்கு அருகாமையில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் ரொறன்ரோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.




## அமெரிக்காவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயுக்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும்." என்றார்.

அமெரிக்காவுக்குள் வரும் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதை பொருள்களின் பெரும் அச்சுறுத்தல்களை தடுக்கும் விதமாக கனடா மற்றும் மெக்சிகோ நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீதம் வரியும், சீனாவில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 10 சதவீதம் வரியும் விதிக்க ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். நெருக்கடிகள் தணியும் வரை இந்த வரி விதிப்புகள் தொடரும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.